யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கலைப்பீடம்

EVELYN ... JAFFNA
60/12

முதலாண்டு மாணவர்க்கான கைநூல்

1984

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

# கலைப்பீடம்

## முதல் ஆண்டு மாணவர்க்கான ஒரு கைநூல்

கலைப்பீடாதிபதி

**பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள்**

தயாரித்தது

யாழ்ப்பாணம்

**1984**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1974 ஓகஸ்ட் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகம் அரசாங்க அறிவித்தல் மூலமாக நிறுவப்பட்டது. அந்நாள் கலாநிதி க. கைலாசபதி அவர்கள் திருநெல்வேலி, பரமேஸ்வராக் கல்லூரி வளவில் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்துக்குத் தலைவராகப் பதவியேற்ருர். 1974 ஒக்டோபர் 6 இல் புதிய வளாகம் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களால் உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. முதலில் விஞ்ஞான பீடமும், மனிதப் பண்பியற் பீடமும் அமைக்கப்பட்டன. கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் பேராதனை வளாகத்திலிருந்து வந்து மனிதப் பண்பியற் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாக 1974 ஒக்டோபர் முதல்திகதி பதவியேற்றுப் புதிய பீடத்தை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்பீடமே பின்னர் கலைப்பீடம் என்ற பெயரைப் பெற்றது. 1979 ஜனவரி முதல்திகதி யாழ்ப்பாண வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறியது.

**கலைப்பீடம் :**

துரதிர்ஷ்டவசமாகப் போதிய வசதிகளுடனும், பொருத்தமான திட்டத்துடனும் மனிதப் பண்பியற்பீடம் ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலை அதன் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. இது ஒரு பெரிய பீடமாக அமையவேண்டும் என்று கல்வி அமைச்சு எண்ணவில்லை. அதனுல், தொடக்கத்தில் தமிழ், சிங்களம், இந்து நாகரிகம், வரலாறு ஆகிய நான்கு துறைகளை அமைப்பதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனுலும் அப்பொழுது கடமையாற்றிய பீடாதிபதி அந்நிலையை ஏற்கமறுத்து, மேலதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற்று 1975 இல் பத்துத் துறைகள் கொண்ட ஒரு பீடமாக இப்பீடத்தை மாற்றியிருந்தார். அத்துறைகளாவன :

தமிழ், சிங்களம், இந்து நாகரிகம், வரலாறு, ஆங்கிலம், பொருளியல், புவியியல், இஸ்லாமிய நாகரிகம், சமஸ்கிருதம், மெய்யியல் ஆகியவையாம்.

இதற்குப்பின்னர் வேறும் துறைகளும், பாடநெறிகளும் சேர்க்கப்பட்டுத் தற்போது பின்வரும் துறைகளும், பாடநெறிகளும் இடம் பெறுகின்றன.

1. தமிழ்த்துறை
2. சமஸ்கிருதத் துறை
3. இந்து நாகரிகத் துறை
4. வரலாற்றுத் துறை
5. பொருளியல் துறை
6. வணிக, முகாமையியல் துறை

7. மெய்யியல் துறை
8. நுண்கலைத் துறை
9. புவியியல் துறை
10. கல்வித் துறை
11. மொழி, பண்பாட்டியல் துறை (ஆங்கிலம், இஸ்லாமிய நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், மொழியியல், சிங்களம், அறபு ஆகிய பிரிவுகள் இதனுள் அடங்கும்)
12. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்பிக்கும் பிரிவு.

தற்பொழுது பின்வரும் பாடநெறிகள் கற்பிக்கப்படுவதற்கு வசதிகள் உள :

தமிழ், சமஸ்கிருதம், இந்து நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், ஆங்கிலம், அறபு, வரலாறு, பொருளியல், புவியியல், வணிகம், வியாபார நிர்வாகம், மெய்யியல், மொழியியல், கணிதம். சிங்களம், அடிப்படைப் பிரெஞ்சு ஆகிய மொழிகள் துணைப்பாட நிலையில் கற்பிக்கப்படுகின்றன. கல்வி பட்டப்பின் படிப்பு நிலையில் கற்பிக்கப்படுகின்றது. நுண்கலைகள் பட்டதாரி நிலையல்லாத ஒரு நிலையில் இராமநாதன் நுண்கலைக் கழகத்திலே கற்பிக்கப்படுகின்றன.

★

## நூலகம்

கலைப்பீட மாணவர்க்கு ஆய்வுகூடமாக அமைவது நூலகமாகும். விரிவுரை அறையைவிட அது அவர்களுக்கு மிக முக்கியமானது. தங்கள் அறிவைப் பல்கலைக்கழகத்தில் வளர்த்துக்கொள்ள நூலகம் அத்தியாவசியமானது. ஒரு பல்கலைக்கழக நூலகமானது ஓரளவுக்குச் சிக்கலான அமைப்பைக் கொண்டதாக இருப்பது தவிர்க்கமுடியாததாகும். எங்களுடைய நூலகத்தின் அமைப்பும் விதிமுறைகளும் பிற நூலகங்களில் உள்ளவாறு அப்படியே இருக்கவும் முடியாது. ஒவ்வொரு நூலகமும் வெவ்வேறு வகைகளில் வளர்ச்சி பெற்றிருக்கும். ஆகவே முதலில் எங்கள் நூலகத்தைப்பற்றி நன்கு அறிந்து, அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளப் பழகவேண்டும். ஒரு நூலகத்தில் எப்படித் தகவல் பெறுவது என்பதை அறிந்து கொள்ளாதவர்கள், தெளிவான ஒரு நோக்கில்லாது அங்கு அலைந்துதிரிந்து நேரத்தை வீணுக்குவர். நூலகத்தின் அமைப்பையும் விதிமுறைகளையும் அறிந்துகொண்டால் அதிக நேரத்தை வீணுக்காமல் வேண்டிய தகவலைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதலில் எங்கள் பொது நூலகத்துக்குச் சென்று அதன் விதிகளை அறிந்துகொள்ள வேண்டும். பொதுவாக எங்கள் நூலகம் காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டு மணிவரை திறந்திருக்கும். ஞாயிற்றுக் கிழமைகளில் திறப்பதில்லை சனிக்கிழமைகளில் அரைநேரம் திறந்திருக்கும். நூல்களை எடுத்து அங்கு வாசிப்பதற்கும், வெளியே எடுத்துச் செல்வதற்கும் விதிகள் உள. நீங்கள் நூலகத்துக்குள் புகுந்ததும், இடதுபுறத்தில் வாசகர்களுக்குச் சேவைபுரிய ஓர் அலுவலகம் உண்டு. அவ்விடத்தில் நீங்கள் விசாரணை செய்யவும் உதவிபெறவும் முடியும். உள்ளே சென்றதும் வலதுபுறத்தில் இருப்பது பருவ இதழ்களைக் கொண்ட பகுதி. இதனை நீங்கள் நன்கு பயன்படுத்தவேண்டும். ஒவ்வொரு துறையிலும் மிக அண்மையில் ஆராய்ந்து பெறப்பட்ட தகவல் களைத்தரும் சஞ்சிகைகள் பல இங்கே உள. அத்துடன் பொது விவகாரங்கள் பற்றிய சஞ்சிகைகளும் உள. **Newsweek, Time, Asia-week, Far Eastern Economic Review, Lanka Guardian** போன்ற சஞ்சிகைகள் சர்வதேச, சுதேச விவகாரங்கள் பற்றி அறிய உதவுபவை. இடதுபுறத்திலேதான் நூலகத்தின் பிரதான நூற்சேகரிப்புகள் காணப் படுகின்றன. முதலில் இருப்பது வெளியே எடுத்துச்செல்லக்கூடிய நூல்கள் அடங்கிய கடன் வழங்கும் பகுதி. அதையடுத்துப் பொதுத் தகவல் தேட்டத்துக்கான **General Reference** பகுதி உண்டு. இங்குதான் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், வேறும் தனித்தனித் துறைகள் சார்ந்த பொது நூல்கள் இருக்கின்றன. கலைக்களஞ்சியங்களுள் **Encyclopaedia Britannica** என்ற தொகுதியை நீங்கள் அடிக்கடி பயன் படுத்தப் பழகவேண்டும்.

அப்பால், சிறப்புத் தகவல் தேட்டப் பகுதிகள் இருக்கின்றன. முதலில் ஆராய்ச்சி மாணவர்க்கான பகுதியாகத் தென்னாசியவியல் பகுதி காணப்படுகின்றது. எமது கலைப்பீடத்தில் ஏறக்குறைய எல்லாத் துறைகளுமே தென்னாசியா சார்ந்த ஆராய்ச்சியிலேதான் ஈடுபட்டிருப்ப தால் எமது நூலகத்தில் அதற்கான சிறப்புப்பகுதி ஆரம்பத்திலிருந்தே ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பாக இலங்கை, இந்தியா ஆகிய நாடுகள் பற்றிய நூல்களை இங்கு பெறலாம். இதற்கு அப்பால் அரிய நூல்கள். ஆவணங்கள் ஆகியவற்றைக் கொண்ட Archives என்றபகுதி உண்டு. இங்குள்ள நூலொன்றை நேரில் சென்று எடுக்க முடியாது. நூலக உதவி யாளர் மூலமாகத்தான் இங்கிருக்கும் நூல்களைப் பெற்று, அவர்மூலம் மீண்டும் அனுப்பிவைக்க வேண்டும்.

நூலகர் அலுவலகம், நிர்வாகப்பகுதிகள் ஆகியவை நூலகத்தில் இன்னொருபுறத்தில் அமைந்துள்ளன. நூலகம் இன்னும் கட்டப்பட்டு முடியவில்லை.

## CARD CATALOGUE அட்டைப் பேரேடு

நூலகத்துக்குள் நுழைந்ததும், பருவ இதழ்ப் பகுதிக்கு அருகாமையில் Card Catalogue என்று கூறப்படும் நூல்களின் விபரங்கள் அடங்கிய அட்டைகளைக்கொண்ட மரப்பெட்டிகளைக் காண்பீர்கள். இவற்றைப் பயன்படுத்த நீங்கள் கட்டாயமாகப் பழகவேண்டும். அப்பொழுதுதான் இலகுவாகவும் நேரத்தை வீணாக்காமலும் உங்களுக்கு வேண்டிய தகவலைப் பெற்றுக்கொள்ள முடியும். நூலகத்தில் வாசிப்பதற்கு வைக்கப்பட்டுள்ள நூல்கள் ஒவ்வொன்றின் விபரங்களையும் ஒவ்வொரு அட்டையில் (3 அங்குல அகலமும் 5 அங்குல நீளமும் உடைய அட்டையில்) எழுதி, அகர வரிசைப்படி ஒழுங்காகச் சிறு லாச்சிகளில் இட்டு மேற்கூடிய பெட்டிகளில் வைத்திருக்கிறார்கள். இவற்றின் உதவியுடன், உங்களுக்கு வேண்டிய நூல்களைக் காலதாமதமின்றிக் கண்டு கொள்ளலாம். நூல் விபரங்கள் பொதுவாக ஒவ்வொரு அட்டையிலும் கையால் எழுதியோ, தட்டெழுத்திலோ, அச்சிட்டோ கொடுக்கப்பட்டிருக்கும். எமது நூலகத்தில் இவை பெரும்பாலும் தட்டெழுத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அட்டையிலும் மேல் இடதுபுற மூலையில் Call number எனப்படும் ஓர் எண் இருக்கும். இதே எண், உரிய புத்தகத்தின் 'முதுகுப்புறத்தில்' ஒட்டப்பட்டும் இருக்கும். இந்த எண்ணின் உதவிகொண்டுதான் நூல்கள் இருக்கும் இடத்தை இலகுவில் அறிவது.

**Dewey Decimal System** : நூல்களை வேறு வேறாக வகுத்து வைப்பதற்குச் சில முறைகள் இருக்கின்றன. டியுயிதசாம்ச முறை (Dewey Decimal System) என்பது ஒன்று. காக்கிரஸ் நூலகமுறை (Library of Congress System) இன்னொன்று. நூலின் பொருளுக்கேற்ப இம் முறைகளின்படி வகுத்தல் நடைபெறுகின்றது. எங்களுடைய பல்கலைக் கழக நூலகத்திலே டியுயிமுறை பயன்படுத்தப் படுகின்றது.

டியுயி முறைப்படி நூல்கள் பத்துப் பெரும் பிரிவுகளுக்குள் அடக்கப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் அடையாள இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அப் பிரிவுகள் பின்வருமாறு :

| | |
|---|---|
| 000—099 | General (communication, library science, bibliography, and so on) |
| 100—199 | Philosophy and Psychology |
| 200—299 | Religion and Mythology |
| 300—399 | Social Sciences (economics,education, sociology, government and so on) |

400—499 Language
500—599 Pure Sciences (biology, botany, chemistry, mathematics, physics, and so on)
600—699 Technology (agriculture, aviation, engineering, medicine, and so on)
700—799 Fine Arts
800—899 Literature
900—999 History (including biography, geography, and travel)

ஒவ்வொரு பெரும் பிரிவுக்குள்ளும் இடம்பெறும் உப பிரிவுகளுக்கு அவ்வப்பிரிவுகளுடைய எண் எல்லைகளுக்குள் எண்கள் வழங்கப்படும். உதாரணமாக, வரலாற்றுக்கு 900. இதனுள் ஐக்கிய அமெரிக்க நாடுகளுடைய (U.S.A.) வரலாறுபற்றிய நூலுக்கு வழங்கப்படும் வகுப்பு எண் 973 எனத் தொடங்கும். இதில் 7 வட அமெரிக்காவைக் குறிக்க, 3 ஐக்கிய அமெரிக்க நாடுகளைக் குறிக்கும். 973—க்குப் பின் வரும் எண்கள் மேலும் மேலும் உப பிரிவுகளைக் குறித்துச் செல்லும். மெல்வில் டியுயி (Melvil Dewey) என்பவர் வகுத்தமுறை என்பதனால் இதை டியுயி முறை என்பர்.

## Author Card, Title card, Subject Card

நூலகத்தில் உள்ள ஒவ்வொரு நூலுக்கும் அந்தந்த நூலாசிரியரின் பெயரின்கீழ் ஒவ்வொரு அட்டை இருக்கும். இதை Author Card என்பர். இதுவே பிரதானமான அட்டை. இந்த அட்டைகளைக் கொண்ட பேரேட்டுப் பெட்டியை (Author Card Catalogue) நீங்கள் அடிக்கடி பயன்படுத்தப் பழகவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் எழுதிய நூலொன்றை நீங்கள் வாசிக்க விரும்பினால், அந்த நூல் நூலகத்தில் இருக்கிறதா ; இருப்பின் எந்த இடத்தில் இருக்கின்றது என்ற தகவல்களை அறிய நேராக அந்நூலாசிரியர் பெயர்கொண்ட அட்டையைத் தேடிப் பார்க்கவேண்டும். பெயர் அகர வரிசையிலே அட்டைகள் அடுக்கப்பட்டிருக்கும். இதேபோல, நூற்பெயரின் அடிப்படையில் காணப்படும் அட்டை Title Card எனப்படும். நூலின் பெயர் தெரிந்து, ஆசிரியர் பெயர் தெரியாவிட்டால் இதனைப் பார்த்து நூலைப் பெற்றுக் கொள்ளலாம். நூற்பொருளின் அடிப்படையில் இடம்பெறும் அட்டை Subject Card எனப்படும். இவற்றை உபயோகிக்கும் முறைபற்றி நூலகரும் அவருடைய உதவியாளர்களும் உங்களுக்கு விளக்குவார்கள்.

# பரீட்சைகள் சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய முக்கிய விதிகள்

பரீட்சைகள் பற்றிய விதிகளைப் பொதுவாக மாணவர்கள் தெளிவாக அறிந்திருப்பதில்லை. அதனால் அவர்கள் அடிக்கடி பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். பல்கலைக்கழக விதிகளைத் தெரியாது இருப்பது மன்னிப்பதற்கு ஒரு காரணமாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. ஆகவே விதிகளை அறிந்திருப்பது மாணவர் கடமையாகும்.

ஒரு கல்வியாண்டில் விடுமுறை தவிர்ந்த, விரிவுரை நடைபெறும் காலம் முப்பது வாரங்களாம் இவை பொதுவாக மூன்று தவணைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தவணையிலும் பத்துவாரங்கள் இடம் பெறும். தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் முப்பதுக்குக் குறைந்த வாரங்களில் விரிவுரைகள் இடம்பெறுவதுடன், மூன்றுக்குக் குறைந்த தவணைகளும் இடப்பெறலாம். 1983/84—ம் ஆண்டு இரண்டு தவணைகளைக் கொண்டுள்ளது. நடைபெறும் விரிவுரைகளுள் 80 சதவித விரிவுரைகளுக்குக் குறையாமல் மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லவேண்டும். இல்லாவிடில், குறிப்பிட்ட பாடத்தின் பரீட்சையை எடுப்பதிலிருந்து ஒரு மாணவர் விலக்கப்படலாம். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொரு பாடத்துக்கும் அவ்வவ் விரிவுரையாளரின் கையொப்பத்தைப் பெறுவதன் நோக்கம் அவ்வப் பாடங்களின் விரிவுரைகளுக்குத் திருப்திகரமான முறையிலே மாணவர் சென்றுள்ளார் என்பதை உறுதிப் படுத்துவதாகும்.

## 1. முதல் ஆண்டுப் பரீட்சை :

முதலாவது ஆண்டில் ஒரு மாணவர் மூன்று பிரதான பாடங்களையும், மூன்று அடிப்படைப் பாடங்களையும் கற்கவேண்டும். பிரதான பாடங்களுள் குறைந்தது இரண்டில் சித்தியடைந்து, மூன்றாவதில் 35—க்குக் குறையாத புள்ளிகளைப் பெற்று, மூன்றிலும் சராசரி 40 புள்ளிகள் பெறுவதுடன், அடிப்படைப் பாடங்களுள் குறைந்தது இரண்டில் சித்தியடைந்து மூன்றாவதில் 25 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்று, மூன்றிலும் சராசரி 40 புள்ளிகள் பெற்றாலேதான் முதலாண்டுப் பரீட்சையிலே சித்தியடையலாம் எல்லாப் பாடங்களிலும் 40 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்றால் சித்தியடையலாம் என்பது கூறுமலே அமையும். ஒவ்வொரு பாடத்திலும் சித்திபெறுவதற்குக் குறைந்தது 40 புள்ளிகள் பெறவேண்டும்.

புள்ளிகள் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன.

A — 70% உம் அதற்கு மேலும்
B — 55% — 69%
C — 40% — 54%
D — 25% — 39%
E — 25 -க்குக் கீழ்.

பரீட்சையிற் சித்தியடையத் தவறுவோர், சித்தியடையாத பாடத்தையோ பாடங்களையோ மட்டும் மீண்டும் அடுத்துவரும் பரீட்சையில் எடுத்துச் சித்தியடைய வேண்டும். அதிலும் சித்தியடையத் தவறினுல் மேலும் ஒரு சந்தர்ப்பம் பொதுக்கலை மாணவர்க்கும், இரு சந்தர்ப்பங்கள் சிறப்புக்கலை மாணவர்க்கும் வழங்கப்படும். எப்படியும் இறுதிப் பரீட்சை எடுக்குமுன், அதற்கு முற்பட்ட பரீக்சைகளில் சித்தியடையாத பாடங்களை மீண்டும் எடுத்துச் சித்தியடைய வேண்டும் என்பதே விதி. இல்லாவிடில், இறுதிப் பரீட்சையிற் சித்தியடைந்தாலும் சான்றிதழைப் பெற முடியாது.

முதலாண்டுப் பரீட்சையிலே சித்தியடையாவிட்டாலும் அடுத்த ஆண்டுப் படிப்பினை மேற்கொள்ளவேண்டும். இது இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்க்குரிய விதியாகாது. அவர்கள் ஒவ்வோர் ஆண்டுப் பரீட்சையிலும் சித்தியடைந்தே அடுத்த ஆண்டுப் படிப்பினை மேற்கொள்ளவேண்டும். கலைப்பிரிவு மாணவர்கள் சிறப்புப் பாடநெறி ஒன்றுக்குச் செல்ல விரும்பினுல் கட்டாயமாக ஆங்கிலத்தில் சித்தியடைந்திருக்கவேண்டும். அத்துடன் சிறப்புப் பாடத்தில 55 புள்ளிகளுக்குக் குறையாமல் எடுத்திருக்கவேண்டும் எனவும் ஒவ்வொரு துறையும் எதிர்பார்க்கின்றது.

பரீட்சையிலே சித்தியடையத் தவறிய மாணவர்க்கு மஹபொலப் புலமை பரிசில் பெறுவதற்கான உரிமையும் இல்லாமற்போகும்.

## ஏனைய பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும்.

எந்த ஒரு பாடத்திலும் சித்தியடையக் குறைந்தது 40 புள்ளிகளாவது பெறவேண்டும். முதலாண்டு தவிர்ந்த ஏனைய ஆண்டுப் பரீட்சைகளில் விதிகள் பின்வருமாறு அமைகின்றன:

அ. பொதுக்கலை :

முதலாண்டின் பின் பொதுக்கலைப் பட்டப் படிப்பிற்குச் செல்வோர் தங்கள் மூன்று பிரதான பாடங்களையும் இரண்டு ஆண்டுக

ளுக்குத் தொடர்ந்து படிக்கவேண்டும். அத்துடன் இரண்டாவது மொழி யாக ஆங்கிலம் என்றபாடத்தையும் கற்கவேண்டும். ஒவ்வோர் ஆண் டின் இறுதியிலும் ஒவ்வொரு பிரதான பாடத்துக்குமுரிய இவ்விரு வினாத்தாள்களைக்கொண்ட பரீட்சை இடம்பெறும். அத்துடன் ஆங் இலப் பரீட்சையும் உண்டு. ஆங்கிலத்தை ஒரு பிரதான பாடமாக எடுப்போர்க்கு முதலாண்டு தொடக்கம் பிரெஞ்சு மொழி அல்லது வேறு குறிப்பிடப்பட்ட மொழி கற்கவேண்டிய அவசியம்உண்டு. ஆங் கிலம் அல்லது வேறு மொழிக்குரிய புள்ளிகள் முழுப்பரீட்சையின் சரா சரியைக் கணக்கிடச் சேர்த்துக்கொள்ளப்படும். ஒவ்வோர் ஆண்டுப் பரீட்சையிலும் சித்தியடைய எல்லாப்பாடங்களிலும் 40 புள்ளிகளுக் குக் குறையாமற் பெறவேண்டும், அல்லது இரண்டு பிரதான பாடங் களிற் சித்தியடைந்து, மூன்றாவதில் 35 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்று, சராசரியாக 40 புள்ளிகளையும் பெறவேண்டும். பொதுக்கலை பாகம் 1 பரீட்சையிலும், பொதுக்கலை பாகம் 2 பரீட்சையிலும் சித்தி யடைந்தால், பொதுக்கலைப் பட்டத்தைப் பெறமுடியும். எந்த ஒரு பாகப் பரீட்சையிலும் சித்தியடையாவிட்டால், அப்பாகத்தின் சித்தி யடையாத பாடங்களை மீண்டும் அடுத்துவரும் பரீட்சையில் எடுத்துச் சித்தியடையவேண்டும். எந்த ஒரு மாணவரும் தனக்குக் கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்தில் பரீட்சையை எடுத்திருந்தாலேதான் இறுதிப் பரீட்சையில் 'வகுப்பு' (Class) பெறுவதற்கு (வேண்டிய புள்ளிகள் இருக்கும் பட்சத்தில்) தகுதியுடையவராவர். அப்படி முதலாவது சந் தர்ப்பத்தில் எடுக்காது விட்டிருந்தால், அதற்கான காரணம் பல்கலைக் கழக செனற் சபையினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் அமைந்தாலே தான் 'வகுப்பு'ப் பெறும் தகுதி வழங்கப்படும்.

'வகுப்பு'ப் பெறுவதற்கான தேவைகள் பின்வருமாறு:

முதல் வகுப்பு — பரீட்சைத் தாள்களுள் அரைப்பங்கிற்குக் குறையாத A தரங்கள் (அதாவது ஆறு பாடப்பிரிவுகளுள் மூன்றுக் காவது A இருக்கவேண்டும்). அத்துடன் முழுப்பரீட்சை யிலும் 65%-க்குக் குறையாத சராசரி.

இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு): அரைப்பங்கிற்குக் குறையாத A அல்லது B தரங்கள்; அத்துடன் முழுப்பரீட்சையிலும் 60%-க்குக் குறையாத சராசரி.

இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு): அரைப்பங்கிற்குக் குறையாத A அல்லது B தரங்கள்; அத்துடன் 55%-க்கும் குறையாத சராசரி.

### ஆ. சிறப்புக்கலை, வணிகம், வியாபார நிர்வாகம்

மேற்படி நெறிகளுக்கான பரீட்சைகள் ஒவ்வோராண்டும் பாகம் 1, 2, 3 எனப் பிரித்து நடைபெறும். மூன்று பாகங்களிலும் சித்தியடைந்தால் அந்தந்த நெறிக்குரிய பட்டத்தைப் பெறலாம்.

ஒவ்வொரு பாகத்திலும் சித்தியடைய எல்லாத்தாள்களிலும் சித்தியடைய வேண்டும், அல்லது ஒருதாளில் மட்டும் D தரத்தைப் பெற்று, சராசரி 40% உம் பெறவேண்டும். சித்தியடையாவிட்டால், சித்தியடையாத தாள்களை மட்டுமே மீண்டும் அடுத்த பரீட்சையில் எடுக்க வேண்டும். பாகம் I இலும் பாகம் 2 இலும் ஆங்கில மொழிப் பரீட்சையும் உண்டு. இரண்டு பரீட்சையிலும் ஆங்கிலமொழிக்குச் சராசரி 40%-க்குக் குறையாமல் எடுத்தாலேதான் ஒருவருக்கு ஏனைய புள்ளிகளின் அடிப்படையில் கிடைக்கவுள்ள 'வகுப்பு' வழங்கப்படும். வகுப்புக்குரிய ஏனைய தேவைகளைப் பூர்த்திசெய்திருந்தும் ஆங்கிலமொழியிற் சித்தியடையத் தவறுவோர் 'வகுப்'ப் பெறமாட்டார்கள். பாகம் 3—க்குரிய பரீட்சை முடியுமுன், ஆங்கிலமொழி மீள் பரீட்சைகளை முடித்திருக்கவேண்டும். அதன்பின் மீள்பரீட்சை எடுக்கமுடியாது.

'வகுப்பு'ப் பெறுவதற்கான தேவைகள் பின்வருமாறு :

முதலாம்வகுப்பு — இறுதியாண்டு ஆய்வுக்கட்டுரை உட்பட எல்லாமாகப் பதினைந்து தாள்களில், எட்டுத் தாள்களிலாவது A தரமும், எல்லாவற்றிலும் சராசரி 65%-க்கு குறையாமலும் இருக்கவேண்டும். ஆங்கில மொழிப் பரீட்சையின் புள்ளிகள் வகுப்புக்கணிப்பிற் சேர்த்துக்கொள்ளப் படமாட்டா.

இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) — எட்டுத்தாள்களில் B தரத்துக்குக் குறையாமலும், சராசரி 60%-க்குக் குறையாமலும் இருக்கவேண்டும்.

இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு) — எட்டுத்தாள்களில் B தரத்துக்குக் குறையாமலும், சராசரி 55%-க்குக் குறையாமலும் இருக்கவேண்டும்.

### இ. இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் இசைக்கலைமணி, நாட்டியக் கலைமணிப் பரீட்சைகள்

இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பிரதான பாடத்துச் செய்முறை, துணைப்பாடத்துச் செய்முறை, சாஸ்திரம், வேறு இருபாடங்கள் ஆகியவற்றுக்கான பரீட்சைகள் ஒவ்வோராண்டும் நடைபெறும்.

அத்துடன் இறுதியாண்டு தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் செய்முறைகளில் இடையாண்டுப் பரீட்சைகளும் உண்டு. ஒவ்வோர் ஆண்டுப் பரீட்சையிலும் சித்தி பெற்றே அடுத்த ஆண்டுப் படிப்பை மேற்கொ ளலாம். மீள்பரீட்சையில் சித்தியடையாத பாடம் மட்டும் எடுக்கப்பட வேண்டும்.

பரீட்சையிலே சித்திபெற, எல்லாப்பாடங்களிலும் 40%-க்குக் குறையாமல் புள்ளிகளைப் பெறவேண்டும், அல்லது செய்முறைப் பரீட்சைகளிலும் சாஸ்திரத்திலும், வேறு ஒரு பாடத்திலும் சித்திபெற்று, சித்தியடையாத பாடத்தில் 25%-க்குக் குறையாமல் பெற்று, 40 -க்குக் குறையாத சராசரியையும் பெறவேண்டும்.

நான்கு ஆண்டுகளுக்கும் உரிய பரீட்சைகளில் சித்தியடைந்தால், உரிய பட்டத்தைப் பெறலாம்.

தரங்கள் (Grades) ஏனைய பரீட்சைகளுக்கு உள்ளவாறு அமையும்.

'வகுப்பு'ப் பெறுவதற்கான தேவைகள் :

முதல்வகுப்பு — செய்முறைகள் உட்படப் பிரதான பாடத்தில் குறைந்தது 3 A தரங்களும் (ஒன்று இறுதியாண்டில்), சாஸ்திரத்தில் குறைந்தது 3 A தரங்களும் (ஒன்று இறுதியாண்டில்) பெற்று, முழுப்பரீட்சையில் 65%-க்குக் குறையாமல் சராசரியும் பெறவேண்டும்.

இரண்டாம் பிரிவு — செய்முறைகள் உட்படப் பிரதான பாடத்தில் குறைந்தது 3 A தரங்களும் (ஒன்று இறுதியாண்டில்), சாஸ்திரத்தில் குறைந்தது 2 B தரங்களும் (ஒன்று இறுதியாண்டில்) பெற்று, முழுப்பரீட்சையில் 55%-க்குக் குறையாமல் சராசரியும் பெறவேண்டும்.

3. பரீட்சைசார் தவறுகளும் குற்றங்களும்

(அ) பரீட்சை மண்டபத்துள் குறிப்புகள் எடுத்துச் செல்லல் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும். இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்படப் பரீட்சை எடுப்பதற்குத் தடை விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றம் அது. தாள்களிலோ, கையிலோ, பதிவுப்புத்தகத்திலோ வேறு எதிலுமோ எழுதிக் குறிப்புகளை எடுத்துச் செல்லவேண்டாம். மறந்துபோய் அவற்றைக் கொண்டுசென்றதாகக் கூறுவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒவ்வோர் ஆண்டும் இக்குற்றத்தைப் புரிந்து மாணவர்கள் தண்டனைபெறுகிறார்கள்.

(ஆ) பரீட்சைக்கு நோய் காரணமாக வரமுடியாவிடின், அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவருடைய அல்லது பல்கலைக்கழக மருத்துவ அதிகாரியுடைய சான்றிதழைப் பெற்றுக் கூடிய விரைவில் பரீட்சைத் துணைப் பதிவாளருக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கவேண்டும். அப்படிச் செய்யாதிருப்பது தவறாகும். தனியார்துறை மருத்துவ அதிகாரிகளுடைய சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மருத்துவச் சான்றிதழைப் பல்கலைக்கழக அதிகாரிகள் ஏற்றுக்கொண்டால் மீண்டும் பரீட்சையைக் குறிப்பிட்ட பாடங்களில் எடுக்கும்போது அவற்றுக்குப் பெறும் புள்ளிகள் பாதிக்கப்படமாட்டா. இல்லாவிடில், நாற்பதுக்குமேல் எவ்வளவு புள்ளிகளைப் பெற்றாலும் அப்பாடங்களில் நாற்பது புள்ளிகள் பெற்றதாகவே கணிக்கப்படும்.

(இ) என்ன காரணத்தைக் கொண்டும் நீண்டகாலமாக விரிவுரைகளுக்கோ பரீட்சைக்கோ வரமுடியாத நிலை ஏற்படின் பீடாதிபதிக்கு அறிவித்து, பல்கலைக்கழக அதிகாரிகளின் அனுமதியைப்பெற்றே வராமல் நிற்கலாம். அனுமதிபெருது நிற்பவர்களை மீண்டும் வகுப்புகளிலே சேர்த்துக்கொள்ள முடியாது.

(ஈ) முதலாண்டிலோ இறுதியாண்டிலோ குறிப்பிட்ட நாளில் அல்லது அதற்கு முன்பாகக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். முதலாண்டுக் கட்டுரைக்குரிய நாட்களை அவ்வத்துறைகள் அறிவிக்கும். இறுதியாண்டு ஆய்வுக்கட்டுரை இறுதித் தவணையின் கடைசி விரிவுரை நாளில் அல்லது முன்பாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் தாமதத்துக்கேற்ப புள்ளிகள் குறைக்கப்படும்.

# பல்கலைக்கழக வாழ்க்கை

இப்பொழுது நீங்கள் பாடசாலை வாழ்க்கையை முற்றுவித்துக் கொண்டு பல்கலைக்கழக வாழ்க்கையைத் தொடங்குகின்றீர்கள். உங்கள் மனதில் எத்தனையோ எதிர்பார்ப்புகள் நிறைந்துள்ளன. அதே நேரத்தில் எத்தனையோ கேள்விகளும் எழுந்திருக்கின்றன. பல்கலைக் கழகம் என்றால் என்ன? பாடசாலைக்கும் பல்பலைக்கழகத்துக்கும் என்ன வேறுபாடு? பட்டம் ஒன்றைப் பெற்றுச் செல்வதற்குத்தானா பல்கலைக் கழக வாழ்க்கை? பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்த நாள் தொட்டு இப்படியான கேள்விகள் உங்கள் மனதில் எழுந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இங்கு வந்தபின் முதல் வாரத்தில் இங்கிருக்கும் பழைய மாணவர்கள் உங்களுடன் பழகிக் கொள்ளும்விதம் உங்களுக்குப் பயத்தையும் ஏக்கத்தையும் கொடுத்து, மனதிலே கலக்கத்தையும் உண்டுபண்ணிப் பல்கலைக்கழகம் பற்றி மிகப் பிழையான ஒரு கருத்தை உருவாக்க உதவலாம். அதன் பின் சிலவாரங்களாக ஒழுங்காக விரிவுரைகளுக்குச் சென்று வரும்போது, மேலும் பல்கலைக்கழகம் பற்றிய உங்களுடைய கருத்து விருத்தியடையத் தொடங்கும். உங்கள் மனதிலே முன்னர் எழுந்த கேள்விகளுக்கு நீங்களாகவே பதில்களையும் கண்டுகொள்ளத் தொடங்குவீர்கள். அப்பொழுது இப்படியெல்லாம் சிந்திக்கக்கூடும் : "பல்கலைக் கழக வாழ்க்கைக்கும் பாடசாலை வாழ்க்கைக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை. பாடசாலையில் முழுநாளும் வகுப்பு, பல்கலைக் கழகத்தில் சில மணித்தியாலங்கள் விரிவுரைகள் இல்லாமல் ஓய்வு கிடைக்கும். பாடசாலையில் கட்டாயமாக வகுப்புக்குப் போகவேண்டும். ஆனால் இங்கு அப்படி இல்லை. பாடசாலையிற் போலல்லாது இங்கு கட்டுப்பாடுகள் குறைவு; விடுமுறை நாட்கள் அதிகம்; அதிபருக்குப் பதிலாகத் துணைவேந்தர்; ஆசிரியர்களுக்குப் பதிலாகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும். ஒரு பெரிய வித்தியாசம் — ஆணும் பெண்ணும் எவருக்கும் அஞ்சாது உறவாடலாம்". ஆம், இப்படித் தான் பல்கலைக்கழகத்தைப்பற்றி நீங்கள் எண்ணத் தொடங்குவீர்கள்.

ஆனால் பல்கலைக் கழகம் என்பது உண்மையில் அப்படியானதன்று. அப்படியாக இருக்கும் ஒரு நிறுவனம் உண்மையான பல்கலைக்கழகமாகாது. இதனை நீங்கள் இப்பொழுதே உணரவேண்டும். ஆகவே தான், உண்மையான பல்கலைக்கழகம் என்றால் என்ன என்பதை நீங்கள் முதலில் அறிந்து கொள்ளவேண்டும். இல்லாவிடில், உங்கள் பல்கலைக்கழக வாழ்க்கையே வீணாய்ப் போய்விடும்.

பல்கலைக்கழகம் என்றால் என்ன? இக்கேள்விக்கு மேனாட்டுப் பேராசிரியர் ஒருவர் கொடுத்த விடையைத் தருவது பொருத்தமென எண்ணுகிறேன்:

"முதலாவதாக, பல்கலைக்கழகம் என்பது ஒரு கழகமாகும். அது ஒரு கட்டிடமோ கட்டிடத் தொகுதியோ அன்று; ஒரு நகரத்தில் பரந்து கிடக்கும் பெருந்தொகையான கட்டிடங்களுமாகாது. உண்மையில், அது ஓர் இடம் என்று சொல்லவே முடியாது. ஓர் இலக்கியமன்றத்தை அல்லது திருச்சபையைப் பற்றி எப்படி நினைக்கின்றீர்களோ, அப்படிப் பல்கலைக்கழகத்தைப் பற்றியும் நினையுங்கள். இரண்டுக்கும் தலைமை அலுவலகமாகவும் செயல்கள் புரிவதற்கான இடமாகவும் ஒரு கட்டிடம் உண்டு. ஆனால் கட்டிடம் வேறு: கட்டிடத்தில் கூடும் சபை வேறு. கட்டிடத்திலே ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுடன் தாமாகவே வந்து கூடும் மக்கள் பலர்தான் சபை''.

''அதுதான் பல்கலைக்கழகம். ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுடன் தாமாகவே வந்து கூடும் ஒரு கழகம். நீங்கள்படித்த பாடசாலைக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டைப் பாருங்கள். பதினைந்து வயதுவரை பாடசாலைக்குச் செல்வது கட்டாயமானதாகும்; பல்கலைக்கழகத்தில் அப்படியன்று... முதியவர்கள் இளையவர்களுக்குக் கல்வி புகட்டும் ஒரு நிறுவனமே பாடசாலை; அதனை நிறுவியதற்கான ஒரே ஒரு நோக்கம் அதுவே.

"ஆனால் பல்கலைக்கழகங்கள் முற்றிலும் வேறுபட்ட ஒரு நோக்கத்துக்காக நிறுவப்பட்டவை — கண்டுபிடிப்பு அவற்றின் நோக்கமாகும். அவற்றின் உண்மையான பணியுடன் கூடவே வருகின்ற ஒரு செயல் மட்டுமே கல்விபுகட்டல்...

"எதைக் கண்டுபிடிப்பதற்காக அவை நிறுவப்பட்டன? இதற்கு ஒரு விடை: புதிய அறிவைக் கண்டுபிடிப்பதற்கு...

''பல்கலைக் கழகத்தின் நோக்கம் என்ன என்ற கேள்விக்கான இரண்டாவது விடை, அறிவைப் பரப்புவதற்கான தேவையுடன் சம்பந்தப்பட்டதாகும்''.

இப்படியான நோக்கங்களுடன்தான் இற்றைக்கு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பு நவீன பல்கலைக்கழகங்களின் முன்னோடிகளாகிய மேலைத் தேசத்துப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு இயங்கின. அறிவைக் கண்டுபிடித்து மேலும் மேலும் அறிவை வளர்ப்பதில் ஈடுபட்ட அறிஞர்கள், அந்த அறிவைப் பிறருக்கும் புகட்டுவதிலும் ஈடுபட்டுப் பல்கலைக்கழ

கங்களை வளர்த்தனர். இதனால், பாடசாலைகளைப் போலல்லாது பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சியையும் போதனையையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

நவீன காலத்தில் பல்கலைக்கழகங்கள் பழைய அமைப்பிலிருந்து எவ்வளவோ மாறிவிட்டன. ஒதுக்கமான நிறுவனமாக இருந்து ஆராய்ச்சியிலும் போதனையிலும் ஈடுபட்ட நிலையை விட்டுப் பல்கலைக் கழகம் மேலைத்தேசத்திலே ஆளும் வர்க்கம் ஒன்றை உருவாக்கும் நிறுவனமாகவும், சமூக பொருளாதாரத் தேவைகளுக்கான பயிற்சியைக் கொடுக்கும் நிறுவனமாகவும், எல்லாத்துறைகளிலும் விஞ்ஞான ஆராய்ச்சியை மேற்கொள்ளும் நிறுவனமாகவும் பத்தொன்பதாம் நூற்றுண்டிலே மாறி, இன்று இப்பணிகள் அனைத்தையும் உள்ளடக்கி இயங்குகின்றது. ஆனலும் அது பிரதானமாகப் பழைய முறைப்படியான பட்டங்களைத்தான் வழங்குகின்றது. பல்வேறு நிலைகளில் ஒரு விஷயத்தையிட்டு ஒருவர் பெற்றுள்ள திறமையை இவை காட்டும். கலைப்பீடத்தில் முதல் நிலையில் Bachelor of Arts (கலைமாணி), அதாவது B.A யும், அடுத்த நிலையில் Master of Arts (முதுமாணி), அதாவது M. A யும், பின்னர் Doctor of Philosophy (கலாநிதி), அதாவது Ph. D யும் இடம்பெறுகின்றன.

நீங்கள் அடுத்துவரும் ஆண்டுகளில் B. A பட்டத்தை அல்லது B. Com (Bachelor of Commerce) அல்லது B. B. A. Bachelor of Business Administration) பட்டத்தைப் பெறுவதற்காகவே படிப்பீர்கள். இப்படி ஒரு பட்டத்தைப் பெற்று நல்ல உத்தியோகம் ஒன்றைப் பெறுவதே உங்களுடைய முக்கிய நோக்கமாக இருக்கும். எனினும் நீங்கள் பல்கலைக்கழகம் ஒன்றிலே சேர்ந்திருக்கிறீர்கள் என்பதை மறக்கவேண்டாம். இந்த நிறுவனம் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியைப் போன்று உங்களை ஒரு குறிப்பிட்ட தொழில் புரிவதற்காகப் பயிற்றுவிப்பதற்கு இருக்கின்றது என்று கொள்வது பிழை. பல்கலைக் கழகம் உங்களுக்குத் தரவுள்ள பயிற்சி வேறு. இங்கு நீங்கள் உங்கள் புத்தியைப் பயன்படுத்தி, சுதந்திரமாகச் சிந்தித்து, உங்களுக்கென மதிப்பீடுகளையும் அபிப்பிராயங்களையும் செய்து கொள்ளப் பழக்க கொள்வதுதான் முக்கியமானது எல்லா விஷயங்களைப் பொறுத்தும் ஏற்கனவே நீங்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களைவிட்டு உண்மையைக் காண முயலவேண்டும். கண்டுகொண்ட உண்மையைக் கைவிடாது அதற்காகப் போராடும் அளவுக்கு அதில் அக்கறை கொள்ளவேண்டும். உங்களுடைய புத்தியை இங்கு கூர்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுடைய அறிவை வளம்படுத்த வேண்டும். இவற்றின் விளைவாக உண்மையான மனி

தப் பண்புகளைக் கற்றும், கண்டு பிடித்தும் முழுமையான மனிதர்க ளாக இங்கிருந்து வெளியேற வேண்டும். நீங்கள் எத்தொழில் புரிந் தாலும் பல்கலைக் கழகம் உங்களை உண்மையான மனிதர்களாக்க உதவ வேண்டும். இங்கு கற்றுக்கொண்ட பண்புகள் நிரந்தரமாக உங்கள் வாழ்க்கையில் இடம்பெற வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் இத்தகைய பயிற்சியைப் பெறுவதற்கு உதவி யாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; நூலகம் ஒன்று இருக்கிறது; பிற வசதிகளும் இருக்கின்றன. இங்குள்ள ஆசிரியர்களைப் பொதுவாக விரிவுரையாளர் என்போம். இவர்கள் மத்தியிலே பல்வேறு பதவி நிலை கள் காணப்படுகின்றன.

அவையாவன (உயர்மட்டத்திலிருந்து கீழாக):

1. பேராசிரியர் (Professor)
2. துணைப் பேராசிரியர் (Associate Professor)
3. சிரேஷ்ட விரிவுரையாளர் (Senior Lecturer)
4. விரிவுரையாளர் (Lecturer)
5. துணை விரிவுரையாளர் (Assistant Lecturer)
6. கல்வி நெறியாளர் (Tutor)
7. போதனாசிரியர் (Instructor)

இவர்களும் உங்களைப்போன்று படித்துக்கொண்டே இருப்பவர்கள். இதனாலேதான் பாடசாலை ஆசிரியர் போன்று இவர்கள் காலையிலிருந்து குறிப்பிட்ட நேரம்வரை பல்கலைக்கழகத்தில் நிற்கவேண்டும் என்ற நியதி இல்லை. அதனால் இவர்கள் இலகுவான வேலை புரிகிறார்கள் என்று எண்ணத்தோன்றும். இவர்களை ஒவ்வொருநாளும் காணமாட்டீர்கள். ஆனால் இவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். அதனால் நீங்களும் இவர்களும் அறிவுவளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண் டிருக்கும், உண்மையை நாடும், பல்கலைக்கழக அங்கத்தவர்கள்.

பல்கலைக் கழகத்திலே மிகவும் முக்கியமான இடம் நூலகம் என் பதை நீங்கள் விரைவிலே கண்டு கொள்வீர்கள். அங்குதான் உங்க ளுடைய ஆராய்ச்சிகளும் சிந்தனை வளர்ச்சியும் பெருமளவு நடைபெ றும். அதுவே உங்கள் ஆய்வுகூடம். ஆகவே அதனைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் புத்தகப் பூச்சிகளாக வேண்டும் என்றில்லை. உங்களுக்குத் தேவையான அறிவைப் பெறவும் ஐயப்பாடுகளைத் தீர்க்கவும், பெரும்பெரும் உலக அறிவாளிகளுடன் (இறந்தோர் உட்பட) உறவாடவும் அதுவே இடம். உங்களுடைய

பாடத்துக்குரிய நூல்களை மட்டும் வாசிக்காது நூலகத்திலே பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களையும் சஞ்சிகைகளையும் வாசித்துக்கொள்ள வேண்டும்.

நூலகத்துக்கு வெளியேயும் உங்கள் ஆளுமையை வளர்ப்பதற்கான வசதிகள் பல உள. விளையாட்டுக்கள், கழகங்கள் என்றெல்லாம் உடலுள விருத்திக்கான வசதிகளை நன்கு பயன்படுத்தவும் வேண்டும். அத்துடன் இங்கு நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பல்வகை மதங்களைச் சேர்ந்தோராயும் பலர் வந்து கூடுகின்றனர். குறுகிய எல்லைகளுக்கு அப்பாற் சென்று பரந்த மனப்பான்மையை வளர்க்க இது அரிய சந்தர்ப்பம்.

எதையும் ஆராய்ந்து உண்மை காணும் பயிற்சியையும், நுட்பமான உயர்வான அறிவையும் பெற்று இறுதியில் வெளியேறும்போது உங்களைச் செம்மையாக்கிக் கொள்வதற்கும் மனித குலத்துக்குப் பயனுள்ள முறையிலே சேவை செய்வதற்கும் நீங்கள் தயாராகிவிடுவீர்கள். நீங்கள் பெற்ற அறிவை உலகுக்கு அளிக்கக் கூடியவர்கள் ஆகிவிடுவீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, பல்கலைக் கழகப் படிப்பானது உங்களை மனிதப் பண்பு நிறைந்தவர்களாக, மனிதனை மனிதனுக மதிக்க வைக்கும் கல்வியாக — இல்லை — மனிதனை மட்டுமன்றி எல்லா உயிர்களையும் மதிக்கவைக்கும் பயிற்சியாக – இருக்குமேயானுல், அப்படிப்பினுல் பூரண பயனைப் பெற்றவர்கள் ஆவீர்கள். நீங்கள் பெறும் உத்தியோகத்தைக் கொண்டு அதை மதிப்பிட வேண்டாம்.

இறுதியாக, எல்லாத்துறைகளிலும் சமுதாயத்துக்கு எதிர்காலத் தலைவர்களை உருவாக்கிக் கொடுப்பது பல்கலைக்கழகத்தின் கடமை என்பதை மறக்கவேண்டாம்.

(1979 இல் மாணவர்க்கு வழங்கப்பட்டது)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அதிகாரிகள்

வேந்தர் : பேராசிரியர் தம்பையா நடராஜா, M.A., Ph.D. (Cantab) Hon. D. Litt. (Jaffna) (ஜனவரி 1984 தொடக்கம்)

துணைவேந்தர் : பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன், M.A.(Cey.),Ph.D.(Lond.)(ஜனவரி 1979 தொடக்கம்)

பதிவாளர் : வே.ந.சிவராசா, B.A.(Cey.) (டிசெம்பர் 1983 தொடக்கம்)

நூலகர் : சி. முருகவேள், B. A. (Cey.), Dip. Lib. (Lond.) (ஜனவரி 1982 தொடக்கம்)

நிதியாளர் : எஸ். எம். ஆலாலசுந்தரம், ACMA. AIWM.

## கலைப்பீடம்

பீடாதிபதி : பேராசிரியர் கா. இந்திரபாலா, B.A.(Cey.),Ph.D.(Lond.) (ஜனவரி 1983 தொடக்கம்)

### 1. தமிழ்த்துறை

துறைத்தலைவரும் பேராசிரியரும் : பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை B.A., Ph. D. (Cey.), D. Phil. (Oxon.)

துணைப் பேராசிரியர்கள் :

பேராசிரியர் கா. சிவத்தம்பி, M.A.(Cey.), Ph.D.(Birmingham)

பேராசிரியர் அ. சண்முகதாஸ், B.A. (Cey.), Ph.D.(Edinburgh)

சிரேஷ்ட விரிவுரையாளர் :

திருமதி கலையரசி சின்னையா, M. A. (Cey.)

விரிவுரையாளர்கள் :

திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம், B.A.(Cey.) M.A.(Jaffna)

திருமதி சித்திரலேகா மௌனகுரு, B. A., B. Phil. (Colombo), M. A. (Jaffna).

துணை விரிவுரையாளர்கள் :

திரு. நா. சுப்பிரமணியம், M. A. (Sri Lanka)

திரு. எஸ். சிவலிங்கராசா, B. A. (Jaffna)

### 2. மொழி, பண்பாட்டியல் துறை

துறைத்தலைவர் : பேராசிரியர் சு. சுசீந்திரராசா, B. A. (Madras), M. A., Ph. D. (Annamalai)

**மொழியியல்**

பேராசிரியர் சு. சுசிந்திரராசா, பேராசிரியர்

**விரிவுரையாளர்கள்**

திருமதி பார்வதி கந்தசாமி, B. A., B, Phil. (Colombo), Ph. D. (Monash).

எம்.ஏ.எம். நுஃமான், B.A., B.Phil. (Colombo), M.A.(Jaffna)

**துணை விரிவுரையாளர் :**

திருமதி ஆர். கயிலைநாதன், B. A., B. Phil. (Colombo),

**ஆங்கிலம்**

**துணை விரிவுரையாளர்கள் :**

செ. கனகநாயகம், B.A. (Sri Lanka) (தற்போது வெளிநாட்டில்)

செல்வி பி. தஞ்சரத்தினம், B.A.(Willson College, Ghambersburg)

**சிங்களம்**

**துணை விரிவுரையாளர் :**

ஏ. அபேஸிங்ஹ, B. A., B. Phil. (Colombo)

**இஸ்லாமிய நாகரிகம்**

**துணை விரிவுரையாளர்கள் :**

கே. எம். எச். காளிதீன், B. A. (Sri Lanka).

எம். ஐ. அப்துல் ரஸாக், B. A. (Sri Lanka) (தற்போது வெளிநாட்டில்)

**கிறிஸ்தவ நாகரிகம்**

**துணை விரிவுரையாளர்கள் :**

ஏ. எக்ஸ். ஜே. வி. சந்திரகாந்தன், M. Phil., M. Th. (Poona) (தற்போது வெளிநாட்டில்)

ஆர். ஏ. ஜே. மத்தயஸ், M. Ph., M. Th. (Rome)

**பிரெஞ்சு**

திருமதி எஸ். இராமநாதன், அதிதி விரிவுரையாளர்

## 3. சமஸ்கிருதத்துறை

**துறைத் தலைவர்:**

வி. சிவசாமி, B. A. (Cey.), B. A. (Lond.), M. A. (Cey.) சிரேஷ்ட விரிவுரையாளர்

திருமதி வி. சிவச்சந்திரன் B.A.(Sri Lanka) துணை விரிவுரையாளர்

## 4. வரலாற்றுத்துறை

துறைத்தலைவர் :

சி.க. சிற்றம்பலம்,B.A.(Cey.),M.A.,Ph.D.(Poona)விரிவுரையாளர்
பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர்(தற்போதுபீடாதிபதி)
சாந்தசீலன் கதிர்காமர் B. A. (Cey.) M. A. (I. C. U. Tokyo)
சிரேஷ்ட விரிவுரையாளர் (தற்போது வெளிநாட்டில்)

விரிவுரையாளர் :

ச. சத்தியசீலன், B.A. (Sri Lanka), M.A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)

துணை விரிவுரையாளர்கள் :

எஸ். கிருஷ்ணராஜா, B. A. (Jaffna), M. A. (Mysore)
திருமதி சோமேச சுந்தரி கிருஷ்ணகுமார், B. A. (Jaffna)
பொ. இரகுபதி, M. A. (Mysore)
பி. புஷ்பரத்தினம், B. A. (Jaffna)
மு. திருநாவுக்கரசு, B. A. (Jaffna)

## 5. இந்து நாகரிகத்துறை

துறைத் தலைவர் :

பி. கோபாலகிருஷ்ணன்,B.A.(Cey.),Ph.D.(Jaffna)விரிவுரையாளர்

பேராசிரியர் :

கா. கைலாசநாதக் குருக்கள், B. A. (Cey.), Ph. D. (Poona) (தற்போது வெளிநாட்டில்)

விரிவுரையாளர்கள் :

திருமதி சி. வாமதேவா, B. A. (Sri Lanka) M. A. (Jaffna)
திருமதி க. இராமநாதன், B.A.,B.Phil.(Colombo),M,A.(Jaffna)
திருமதி ஞானா குலேந்திரன், B. A. (Cey.), M. A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)

துணை விரிவுரையாளர்கள் :

செல்வி மல்லிகா கனகரத்தினம், B. A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)
திருமதி நா. செல்வநாயகம், B. A. (Colombo)
எம். வேதநாதன், B. A. (Jaffna)

## 6. பொருளியல் துறை

துறைத்தலைவர் :

நா. பாலகிருஷ்ணன், B. A. (Cey.), M. Phil. (Leeds) சிரேஷ்ட விரிவுரையாளர்

வி. நித்தியானந்தன், B. A. (Cey.), Ph. D. (Reading) சிரேஷ்ட விரிவுரையாளர்

விரிவுரையாளர்கள் :

எஸ். கே. சண்முகநாதன், M. A., Ph. D. (Poona)

என். பேரின்பநாதன், B. A. (Sri Lanka), M. A. (Jaffna)

துணை விரிவுரையாளர்கள் :

வி. பி. சிவநாதன், B A. (Sri Lanka), M. A. (Jaffna)

எம். என். அந்தோனிமுத்து B. A. (Sri Lanka)

என். சண்முகலிங்கம், B. Ed. (Sri Lanka)

ஈ. ஏ. செல்வநாதன், B. A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)

எஸ். எஸ். இராஜேந்திரன், B. A. (Sri Lanka) (தற்போது வெளிநாட்டில்)

ஜி. ஈ. கேப்ரியல், B. A. (Sri Lanka) (தற்போது வெளிநாட்டில்)

செல்வி பி. ஆர். எஸ். பிலிப்புப்பிள்ளை, B. A. (Jaffna)

செல்வி கிரிஜா சிவப்பிரகாசம், B. A. (Jaffna)

திருமதி எஸ். விவேகானந்தன், M. Sc. (Moscow State)

செல்வி எஸ். சோமசுந்தரம், B. A. (Jaffna)

## 7. வர்த்தக, முகாமையியல் துறை

துறைத் தலைவர் :

வி. நித்தியானந்தன், பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளர்

துணை விரிவுரையாளர்கள் :

கே. சிவராஜா, B. Sc. (Sri Lanka)

எம். வை. எம். சித்திக், B. Com. (Sri Lanka)

கே. தேவராஜா, B. Com. (Sri Lanka)

அதிதி விரிவுரையாளர்கள் :

ஆர். என். வரேந்திரன்

கே. குகபாலன்

கே. கந்தசாமி

வி. பாலகிருஷ்ணர்

வி. கார்த்திகேசு

எஸ். அருள்வரதன்

ஏ. மரியாம்பிள்ளை

## 8- மெய்யியல் துறை

துறைத் தலைவர் :

எஸ். கிருஷ்ணராஜா, B. A. (Cey.), Ph. D. (Moscow) விரிவுரையாளர்

வே. இராமகிருஷ்ணன், B.A.(Cey.), Dip-in Ed., M.A. (Lond) Ph. D. (Lancaster) சிரேஷ்ட விரிவுரையாளர் (தற்போது வெளிநாட்டில்)

விரிவுரையாளர் :

எம். எஸ். அனெஸ், B. A. (Sri Lanka), M. A. (Jaffna)

துணை விரிவுரையாளர்கள் :

என். ஞானகுமாரன், B. A. (Sri Lanka)

சி. ஆதவன், B. A. (Sri Lanka)

## 9. புவியியல் துறை

துறைத் தலைவர் :

பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, B. A. (Cey.), Ph. D. (Durham) பேராசிரியர்

எஸ். பாலச்சந்திரன், B. A. (Cey.), M. Sc. (Birmingham) சிரேஷ்ட விரிவுரையாளர்

விரிவுரையாளர்கள் :

ஆர். மதனாகரன், B. A. (Cey.), M. A., D. D. P. (Mysore)

கே. குகபாலன், B. A. (Sri Lanka), M. A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)

ஆர். சிவச்சந்திரன், B. A. (Sri Lanka), M. A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)

அ. கணபதிப்பிள்ளை, B. A. (Sri Lanka), M. A. (Jaffna) (தற்போது வெளிநாட்டில்)

எம். புவனேஸ்வரன், M. A. (Sri Lanka), M.Sc. (Queensland)

துணை விரிவுரையாளர்கள் :

பி. இராஜேஸ்வரன், B.A.(Sri Lanka), Dip. in Geomorphology (I.T.C. Netherlands)

கே. ஆறுமுகம், B. A. (Jaffna)

செல்வி எம். தேவரஞ்சிதம், B. A. (Jaffna)

செல்வி ஏ. ஜெயந்தி, B. A. (Jaffna)

கே. ரூபமூர்த்தி, B. A. (Cey.) M. Sc., Ph. D. (Kyushu)

கல்வி நெறியாளர் :

செல்வி எஸ். சுப்பிரமணியம், B A. (Jaffna)
செல்வி ஆர். நாகராஜா, B. A. (Jaffna)
செல்வி ப. சிவபாதசுந்தரம், B A. (Jaffna)
எஸ். செல்வநாயகம், B. A. (Jaffna)

10. நுண்கலைத்துறை (இராமநாதன் நுண்கலைக்கழகம் உட்பட)

துறைத் தலைவர் :

பேராசிரியர் கா. சிவத்தம்பி, தமிழ்த் துணைப் பேராசிரியர்

துணை விரிவுரையாளர்கள் :

கி. மௌனகுரு, M. A. (Sri Lanka)
செல்வி ரேணுகா பாலசிங்கம், M. Music (Madras)
செல்வி சாந்தா பொன்னுத்துரை, Dip. in Bharata Natya (Ka akshetra) (தற்போது வெளிநாட்டில்)

போதனாசிரியர்கள் :

செல்வி தனதேவி சுப்பையா, Sangita Vidvan (Madras) (தற்போது வெளிநாட்டில்
திருமதி தை. பரந்தாமன், Sangita Ratnam (RAFA), Pannisaimani
திருமதி ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்தசிவம், Sangita Ratnam (RAFA), Sangita Vidvan (Madras)
ஏ. கே. கருணாகரன், Sangita Ratnam (RAFA), Sangita Vidvan (Madras)
ஏ. எஸ். இராமநாதன், Sangita Bhooshanam (Annamalai)
திருமதி ஞா. பத்மசிகாமணி, Sangita Vidvan (Madras)
செல்வி பா. நடராஜா, Sangita Vidvan (Tamilnadu)
செல்வி மாலினி ஸ்ரீநிவாசன், Sangita Vidvan (Madras)
ஏ. சத்தியசீலன், Sangita Bhooshanam, B. Music (Annamalai) (தற்போது வெளிநாட்டில்)
திருமதி பி. உமாசங்கர், Dip. in Bharata Natya (Jaffna)
திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, Dip. in Bharata Natya, Bharata Chudamani
என். சோமாஸ்கந்த சர்மா, Vadya Visharada (Madras)
என். வி. எம் நவரத்னம், Sangita Bhooshnam (Annamalai)
எஸ். பத்மலிங்கம், Sangita Bhooshanam (Annamalai)
செல்வி எம். வில்லவராயர், B. Music (Madras)

திருமதி அனுஷா தர்மராஜா, Dip. in Bharata Natya (Kalakshetra)
செல்வி நளினி சோமசுந்தரம், Sangita Vidvan (Tamilnadu)

## 11. கல்வித்துறை

துறைத் தலைவர் :

பேராசிரியர் ப. சந்திரசேகரம், B. A (Cey.), Dip. in Ed., M. A. (Lond), துணைப் பேராசிரியர்

சிரேஷ்ட விரிவுரையாளர்கள் :

ரி. வேலாயுதம், B. Sc. (Mad), M.A. (Cey.), Ph.D. (La Trobe) (தற்போது வெளிநாட்டில்)
ஏ. கருணாகரன், B.Sc.(Madras), M A.(Ohio), Ph.D.(Sri Lanka)
வி. ஆறுமுகம், B. A. (Cey.), M. Phil. (Lond.)

விரிவுரையாளர் :

கே. சின்னத்தம்பி, B. Sc. (Madras), M.A. (Sri Lanka)

துணை விரிவுரையாளர் :

சபா ஜெயராசா, B.Ed.(Cey.), M. A. (Sri Lanka)

## 12. ஆங்கில மொழி கற்பிக்கும் அலகு

தலைவர் :

ஏ. சுரேஷ் கனகராஜா, B.A. (Kelaniya) துணை விரிவுரையாளர்

போதனாசிரியர்கள் :

ஜி. சிவகுருநாதன், B. A. (Mysore)
எஸ். விநாயகமூர்த்தி, B. A. (Sri Lanka)
ஏ ஜே. கனகரத்ன, B. A. Cey.)
திருமதி எஸ். விக்னராஜா, B. A. Sri Lanka)
செல்வி எம். என். எல். ஞானப்பிரகாசம், B A. (Jaffna)
செல்வி ஆர். எஸ். கனகரத்தினம், B. A. (Jaffna)
செல்வி எஸ். ஞானசேகரம். B. A. (Jaffna)
செல்வி எம். சின்னத்தம்பி, B. A. (Peradeniya)
கே. சி. கதிர்காமர், B. A. (Madras)
வி. எல். ரவீந்திரன், B. A (Peradeniya)
திருமதி தயாநிதி செல்வநாயகம், B A. (Cey.)
திருமதி பரம்சோதி, B. A., Ph. D.
பி. கணேசரத்தினம், B Ed., M. A. (Hull)
கே சிவசுப்பிரமணியம், B. A. (Mad.)
திருமதி எஸ். தர்மபாலன், B. A. (Cey.)
செல்வி கே. பிலிப்ஸ், B. A. (Jaffna)
செல்வி எம். முத்தையா, B. A. (Jaffna)
திருமதி கே. மேதர், B. A. (Kelaniya)

## 1983/84 ஆண்டின் தவணைகள்

1983—84 ஆண்டின் தொடக்கம் பிற்போடப்பட்டதனால் இந்த ஆண்டு பின்வரும் இரண்டு தவணைகள் மட்டுமே இடம் பெறுகின்றன :

முதலாவது தவணை — ஜனவரி 2 1984 — மார்ச் 30 1984

இரண்டாவது தவணை — ஏப்பிரல் 16 1984 — ஜூலை 27 1984

## தொடர்பு

கலைப் பீடத்தின் முகவரி :

கலைப் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இராமநாதன் வீதி
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்

தொலைபேசி :

யாழ்ப்பாணம் 22481 (கலைப்பீடாதிபதி, துணைத்தலைவர்கள் ஆகியோருக்கு நீடிப்புகள் உள்ளன), 23626
துணைவேந்தர் 23594
பதிவாளர் 23593
நிதியாளர் 23592

குறிப்புகள் :

ST. JOSEPH'S CATHOLIC PRESS JAFFNA